# DEPOSITION OF WITNESS

(Chapter XXII code of criminal procedure)

IN THE COURT OF ADDITIONAL MAHILA COURT, ERODE

CC.No.15 /2024

Deposition of Witness for P.W.3

| | | | |
|---|---|---|---|
| Name | : சத்தியமூர்த்தி | Caste | : |
| Father's Name | : அருணாசலம் | Calling | : |
| Village | : ராஜீவ்நகர் | Religion | : |
| Taluk | : ஈரோடு | Age | :39 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 17.**05.2024**

சாட்சி சத்திய பிரமாணம் செய்து வைக்கப்படுகிறார்.

**<u>முதல் விசாரணை:</u>**

நான் தற்போது ஈரோடு மாவட்டம் ராஜீவ்நகரில் வசித்து கொண்டு பெருந்துறை சிப்காட்டில் கூலிவேலை செய்து வருகிறேன். எதிரி மைக்கேல் ஜான்ஸனை தெரியும். அவர் எனது தாயார் வீட்டிற்கு அருகில் குடியிருந்து வருகிறார். 16.07.2023 ந்தேதி மாலை சுமார் 7.00 மணிக்கு நான் வேலை முடித்து வந்து கொண்டிருந்தபோது எனது வீட்டிற்கு முன்பு மைக்கேல் ஜான்ஸன், அவரது மனைவியுடன் சண்டைபோட்டு கொண்டிருந்தார். நான் அவரது பக்கத்துவீட்டில் குடியிருக்கிறேன். அவர்களது குடும்ப பிரச்சனை என்பதால் நான் தலையிடவில்லை. போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**(அரசு தரப்பு வழக்கறிஞர் சாட்சி பகுதி பிறழ் சாட்சியாக அறிவிக்க கோரி அனுமதி கேட்டதின் பேரில் சாட்சி பகுதி பிறழ் சாட்சியாக அறிவிக்கப்படுகிறார்).**

**<u>அரசு தரப்பு குறுக்கு விசாரணை:</u>**

16.07.2023 ந்தேதி இரவு 8.00 மணி சுமாருக்கு ஸ்டெல்லா வீட்டின் முன்பு நானும், ஸ்டெல்லா, ஸ்டெல்லாவின்தாயார் மேரி, மற்றும் இரவி ஆகியோர் பேசிக்கொண்டு இருந்தோம் என்றால் சரிதான். அங்கு வந்த மைக்கேல் ஜான்ஸன், அவரது மனைவி ஸ்டெல்லாவை பார்த்து கண்டரோலி, தேவடியா, முண்டை என்று கெட்ட வார்த்தைகளால் திட்டினார் என்றால் சரிதான். அப்போது நானும், ஸ்டெல்லாவின்தாயார் மேரி, மற்றும் இரவி ஆகியோர் ஏன் இவ்வாறு பேசுகிறாய் என்று கேட்டபோது எதிரி தனது பேண்ட்

WEBPAGE

பாக்கெட்டிலிருந்து கத்தியை எடுத்து காட்டி இன்னைக்கு நீங்கள் எல்லாம் இருக்கிறதால, இன்னைக்கு போறேன், இல்லையின்னா ஸ்டெல்லாவை குத்தி கொன்றுவிடுவேன் என மிரட்டினார் என்றால் சரிதான். மைக்கேல் ஜான்ஸன் தொடர்ந்து வீட்டின் சன்னல், கதவுகளை தட்டி தொந்தரவு செய்கிறார் என்றால் சரிதான். முதல் விசாரணையின்போது நீதிமன்றத்தில் முதல்முறையாக சாட்சியம் அளிப்பதால் பதற்றத்தில் சொல்லமுடியவில்லையென்றால் சரிதான்.

**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை**:இல்லை

**மறுவிசாரணை**:இல்லை

WEB PAGE